**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**2023–ம் ஆண்டு ஜுலை திங்கள் 28–ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ஐ.ஏ.எண்.01/2023**
**இன்**
**அ.வ.எண்.10/2012**

ஹென்றி ......மனுதாரர்/வாதி

/எதிர்/

1.வின்செண்ட் மச்சாது
2.இருதயராஜ் மச்சாது
3.O.A.எத்தே பாதர்
4.C.சதீஸ்கண்ணன்
5.தசரதன்
6.து.குயின்ராஜ்
7.சாலமோன்
8. D.உமாபிரியா
9.டிட்டோ(மரணம்)
10.A.அந்தோணி ருவிஸ்டன்
11.A.பெர்னாட்சா பெர்னாண்டோ
12. இந்திராணி
13.ஏ.காஞ்சனா
14. லோகா ........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 10.07.2023–ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4, 6, 11, 12 எதிர்மனுதாரர்கள் ஒருதலைப்பட்சமாக இருந்தநிலையில் 5, 7, 8, 10, 14 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு.ஹரிஹரன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களையும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், சிபிசி கட்டளை 6 விதி 17 ன் படி மனுவில் கண்ட விபரப்படிக்கு திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது

**<u>2) மனுவின் சுருக்கம்</u> :–**

தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என உரிமை விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் மேற்படி பிரதான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் கண்ட 5 மற்றும் 7 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்களை பொறுத்து பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டதாகவும், எனவே மேற்படியார்கள் இந்த வழக்கிற்கு அவசிய கட்சிக்காரர்கள் என்றும் எதிர்வாதம் செய்ததின்பேரில் அவர்கள் மேற்படி வழக்கில் 8 முதல் 13 பிரதிவாதிகளாக இ.ம.எண்.163/2014 மனுவில் தேதி ஏற்பட்ட உத்தரவின்படி சேர்க்கப்பட்டு அதன் பேரில் பிராது திருத்தப்பட்டது. ஆனால் அவ்வாறு பிராது திருத்தப்பட்ட போது மேற்படி நபர்கள் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரத்தையும் கோரி தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் தவறுதலாக மேற்படி பரிகாரம் கோராமல் பிராது திருத்தப்பட்டுள்ளது.மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. Technical Error ஆகும். மேற்படி விபரம் தற்போது தான் என் வழக்கறிஞர் மூலமாக எனக்கு தெரிய வருகிறது. எனவே மேற்படி பரிகாரத்தை கோரி பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமயாய் இருக்கிறது. இல்லாது போனால் எனக்கு மிகுந்த நஸ்டங்கள் ஏற்பட்டுவிடும்.

3. **<u>5, 8, 10ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதார்/வாதி மனுவில் வழக்கில் கண்ட 5 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்களை பொறுத்து பல்வேறு

நபர்களுக்கு கிரையம் கொடுத்து விட்டதாகவும், எனவே மேற்படியார்கள் இந்த வழக்கிற்கு அவசிய கட்சிக்காரர்கள் என்றும், எதிர்வாதம் செய்ததன்பேரில் அவர்கள் மேற்படி தேதி ஏற்பட்ட உத்தரவின்படி சேர்க்கப்பட்டு அதன்பேரில் பிராது திருத்தப்பட்டது என்றும், ஆனால் அவ்வாறு பிராது திருத்தப்பட்டபோது, மேற்படி நபர்கள் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரத்தையும் கோரி தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், ஆனால் தவறுதலாக மேற்படி பரிகாரம் கோராமல் பிராது திருத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. Technical Error ஆகும் என்றும் கூறியிருப்பது இந்த எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதியால் மறுத்து ஆட்சேபிக்கப்படுகிறது.

மேற்படி அசல் வழக்கில் 8 முதல் 13 பிரதிவாதிகளை அசல் வழக்கில் சேர்ப்பதற்கு இடைக்கால மனு 2013ம் வருடமே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றம் மேற்படி மனுவினை கோப்பிற்கு எடுத்து 8 முதல் 13 பிரதிவாதிகளை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்தும், மேலும் மேற்படி அசல் வழக்கை திருத்தம் செய்யவும் உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்பேரில் இந்த மனுதாரர் 2014ம் வருடமே அசல் வழக்கை திருத்தம் செய்துள்ளார். மேலும் திருத்தம் செய்யப்பட்ட நாள் முதல் பல வாய்தாக்கள் மேற்படி மனுதாரர்/வாதி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இவ்வாறிருக்கையில் பல வருடங்கள் கடந்த நிலையில் மனுதாரர்/வாதி மீண்டும் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் நீதிமன்ற காலத்தையும், நேரத்தையும் வீணடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே இம்மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனால் இம்மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) <u>பிரச்சினை</u> :-**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :–

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

6. மனுதார்/வாதி தரப்பில் அசல் வழக்கில் கண்ட சொத்தினை 8 முதல் 13 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்திருப்பதாக 5 மற்றும் 7ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. அதனால் அசல் வழக்கில் 8 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பினராக இ.ம.எண்.163/2014 ல் ஏற்பட்ட உத்தரவுப்படி சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி நபரிடம் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லாது என பரிகாரம் கோராமல் பிராது திருத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. Technical error ஆகும். மேற்படி விபரம் தற்போது தெரியவந்தது. அதனால் அசல் வழக்கில் பிராதில் பரிகாரத்தை திருத்தம் செய்ய அனுமதிகோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இதற்குமாறாக எதிர்மனுதார்கள் தரப்பில், அசல் வழக்கில் 8 முதல் 13 பிரதிவாதிகளை சேர்ப்பதற்காக இ.ம.எண் 2013ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பின்பு 8 முதல் 13 பிரதிவாதிகளை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது. எனவே பல வருடங்கள் கடந்த நிலையில் மனுதார்/வாதி இம்மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. நீதிமன்றத்தின் காலத்தை வீணடிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

8. மேற்படி இருதரப்பிலும் சொல்லப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்கையில், மனுதார்/வாதி அசல் வழக்கானது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

அதேபோல் இ.ம.எண்.163/2014 ல் என்ற மனுவில் 12.01.2018ம் தேதி ஏற்பட்ட உத்தரவின்படி, 8 முதல் 13 பிரதிவாதிகள் தாவா சொத்தினை வழக்கு நிலுவையில் இருக்கும்போது கிரையம் பெற்றுள்ளார்கள் என்ற அடிப்படையில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள். அதன்பின்பு தற்போதுதான் மேற்படி 8 முதல் 13

பிரதிவாதிகள் பெற்ற கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் கோராமல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரியவந்ததாக சொல்லப்பட்டுள்ளது.

9. அதேவேளையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் பல ஆண்டுகள் கழித்து இந்த சீர்திருத்த மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், 2013 ஆண்டியிலேயே 8 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது. அப்போதும் சீர்திருத்தம் செய்யாமல் பல வருடங்கள் கடந்த நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சொல்லப்பபட்டுள்ளது.

இருந்தபோதிலும் 8 முதல் 13 பிரதிவாதிகள் 12.01.2018 ம் தேதி இ.ம.எண்.163/2014 ல் ஏற்பட்ட உத்தரவுப்படி தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். அதன்தொடர்ச்சியாக வழக்கினை 8 முதல் 13 பிரதிவாதிகள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். அதனால் மேற்படி நபர்கள் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கோருவது மனுதார்/வாதிக்கு அவசியமான ஒன்றாகும். ஏனெனில் வழக்கு இறுதியாக விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு பகரப்பட்டப்பின் ஒருவேளை மனுதார்/வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டால் அதனை நிறைவேற்றம் செய்யமுடியாது. அது சம்பந்தமாக மீண்டும் ஒரு வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் காலம் கடந்து மனுவை தாக்கல் செய்திருப்பதாக ஆட்சேபித்துள்ளார்கள். ஆனால் இந்த வழக்கில் 8 முதல் 13 பிரதிவாதிகள் தொடர்ந்து continuous ஆக வழக்கினை நடத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாகதான் மேற்படி 8 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிராக பிராது பரிகாரத்தை சீர்திருத்தம் செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்திருப்பதால், புதிய வழக்குமூலம் எதுவும் எழவில்லை என இந்தநீதிமனறம் முடிவு செய்கிறது.

10. எனவே மேற்கண்ட பரிசீலனையின்படி இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுவை அனுமதித்து மனுதாரர்/வாதி ஒரு வாய்ப்பு அளிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை.

நீதியின்நலனை கருத்தில்கொண்டு இம்மனு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

**மனுதாரர்/வாதி வரும் 10.08.2023ம் தேதிக்குள் ரூ.1000/–யை 5, 8, 10ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும். தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.**

**மீண்டும் அழைக்க 10.08.2023**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 28 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

sd/–S.இளையராஜா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :– இல்லை.

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u> :– இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:–</u> இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u> :– இல்லை.

sd/–S.இளையராஜா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.